Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

# சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

## தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 10

வாரம் 33

**அலகு : குகப்படலம்**

### இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :

- இராமாயணம் பற்றிய விபரங்களை அறிந்து கூறுவார்.
- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் நயந்தவற்றை எழுதுவார்.

### மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :

I. இராமாயனம் பற்றி சுருக்கமாக விளங்கிக் கொள்க.
- வடமொழியில்
  - வான்மீகி - வான்மீகி இராமாயணம்
  - போதயனார், வசிட்டர் முதலானோரும் வடமொழியில் பாடியுள்ளனர்
- தமிழில்
  - கம்பர் - கம்பராமாயணம்
- இந்தியில்
  - துளசிதாசர் - துளசிராமாயணம்
- 6 காண்டங்களைக் கொண்டது
  1. பால காண்டம்
  2. அயோத்தியா காண்டம்
  3. ஆரண்ய காண்டம்
  4. கிட்கிந்தா காண்டம்
  5. சுந்தர காண்டம்
  6. யுத்த காண்டம்
- காண்டம் : ஒரு காப்பியத்தின் பிரிவு (பெரும் பகுதி)
- படலம் : காண்டத்தின் உட்பிரிவு (சிறு பகுதி)

II. கம்பர் பற்றிய சில விடயங்களை அறிக.
- சோழ நாட்டின் திருவழுந்தூரில் பிறந்தவர்
- திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலாலும் சோழ மன்னன் குலோத்துங்களாலும் ஆதரிக்கப்பட்டவர்
- ஏர் எழுபது, சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, மும்மணிக்கோவை முதலான நூல்களுடன் சில தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

III. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 40 இலுள்ள பாடல்கள் இரண்டையும் சந்தி பிரித்து வாசிக்கவும். தேவைப்பட்டால் கொண்டு கூட்டி வாசிக்க வேண்டும்.

IV. முதலாவது பாடல் பின்வருமாறு கொண்டு கூட்டி வாசிக்கப்படல் வேண்டும் என்பதைக் கவனிக்க.

சூழ்படை நீர்சுழித்து வருதுறை ஆற்றை
கழித்து நீக்கியது என கள்ள ஆசையை

அழித்து அவனி பண்டு ஆண்ட
வேறு வேந்தரை இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான்

V. உரிய இரு பாடல்களிலும் உள்ள அரும்பதங்களின் பொருளைத் தேடியறிக.

VI. ஒவ்வொரு பாடலினதும் பொருளைத் தொகுத்து எழுதுவதற்கு முயற்சிக்கவும்.

VII. இரு பாடல்கள் தொடர்பான பின்வரும் அட்டவணையிலுள்ள விடயங்களை நன்கு கற்றறிக.

| பாடல் இல | தலைப்பு | விடயம் | பதப்பொருள் | விசேட விடயம் |
|---|---|---|---|---|
| 01 | பரதன் மரக்கலத்தில் ஏறுதல் | தன்னை சூழவுள்ள படைகள் கங்கையை கடந்துவிட அங்கே நின்ற பரதனும் மரக்கலத்தில் ஏறினான் | அவனி – உலகம்<br>பண்டு – முன்பு<br>வேந்தர் - அரசர்<br>இழித்து – கீழ்படுத்தி | பரதன் குணத்தால் மேல் ஏறுதல் மரக்கலத்தில் ஏறியமையை இலக்கியச் சுவையுடன் மரக்கலத்தில் ஏறியதாகக் கூறுதல் |
| 02 | கோசலை பிராட்டியின் அறிமுகம் | தசரதனின் முதல் மனைவி இராமனின் தாய் நான் பிறந்ததால் இவர் மகன் அரசை இழந்தான் என கோசலையை பரதன் குகனுக்கு அறிமுகம் செய்கின்றான் | குரிசில் - தலைவன்<br>கோ – அரசன்<br>சுற்றத்தார் - உறவினர் | நாராயனின் அவதாரமே இராமன் பிரம்மா நாராயனின் வயிற்றில் தோன்றினார் ஆகிய புராண வரலாறு கூறுதல் |

VIII. மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

IX. பாட நூலின் பயிற்சி வினாக்களுள் முதலிரு வினாக்களுக்கும் விடை எழுதுக.

X. இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

XI. அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**Youtube :** **https://www.youtube.com/watch?v=OKvnZSxUoZg**

**https://www.youtube.com/watch?v=VULC_zxQwRA**

**கணிப்பீடு :**

**1. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. "கழித்து நீக்கியது என கள்ள ஆசையை" - இங்கு கள்ளம் என்பது,
   1. வஞ்சனை 2. பள்ளம் 3. நீர் 4. பழைமை
2. "கொற்றத்தார் குரிசில் இவர்" - இங்கு குரிசில் என்பது,
   1. குரு 2. ஆசான் 3. சிறியவன் 4. சிறந்த ஆண்
3. "கொற்றத் தார் குரிசில்" - இங்கு தார் என்பது
   1. குலை 2. மலை 3. மாலை 4. வாழை

**2. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான முறையில் விடை எழுதுக.**

1. கம்பராமாயணம் எத்தனைக் காண்டங்களைக் கொண்டது?
2. பரதன் குகனை சந்தித்தமைக்கான காரணம் என்ன?
3. பரதனின் குணவியல்புகள் இரண்டினைத் தருக.
4. கோசலையின் குணவியல்புகள் 2 தருக.

**3. பின்வரும் கட்டமைப்பு வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பரதனின் குணப்பண்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை விளக்குக.
2. பரதன் கோசலை மீது கொண்ட மதிப்பு எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?